ஸ்ரீ

ராமஜெயம்.

நீதிசார மூலமும்-உரையும்.

இவை

திருவாரூர்

தியாகராய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

காஞ்சிபுரம்.

வீராசாமிமுதலியார்குமாரர்

திருவேங்கடமுதலியாரது

இயற்றமிழ்விளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

தாரண௵.

இதன்விலை-அணா-க.

கடவுள் துணை.

நீதிசாரமூலமும் உரையும்.

காப்பு.

நேரிசைவெண்பா.

பருதிமதியுலவு பார்மிசையோர்க்கெல்லாந்
தருமநெறிநீதிதனைச்சாற்றக்-கருதியிடு
துங்கவெழுத்தைந்துபொருள் சுந்தரற்பொற்செஞ்சடையிற்
கங்கைசுதன்றந்திமுகன்காப்பு.

கடவுள்வாழ்த்து,

அனைத்துலகெங்குந்தானு யமரர்கோன்றேவனாகி
நினைத்தவருளத்தினித்த நேசமாய்நெடுமால்பாத
மனத்தினிலிருத்திமுன்ன மறைவல்லோருரைத்தநீதி
யினத்தினைத்திரட்டியுள்ள சாரகானியம்பலுற்றேன்

(இ-ள்) சர்வலோகேஸ்பரனுமாய் சர்வாந்திரியாமியாய் தேவர்களுக்கெல்லாந்தேவனுமாயிருந்துள்ள ஸ்ரீபுருஷோத்தமனை நமஸ்கரித்துநீதிசாரத்தினுடையதிரட்சிதனைச் சொல்லுகிறேன்-எ-று. (௧)

பாவபுண்ணியம்.

நன்றுடன்றீதானாலு மவரவர்நயந்துதன்னாற்
பண்ணியபாவநன்மை பதித்தவரனுபவிப்பார்
சென்றிடுநூறுகற்பஞ் செல்லினுந்தவிர்ந்திடாது
அன்றுசெய்யனுபவங்க ளநுபவித்திடவும்வேண்டும்

(இ-ள்) நன்றேயாகிலும் தீதேயாகிலும் தன்னாற்பண்ணப்பட்டபாவபுண்ணியமிரண்டுந்தானேயனுபவிக்கவேண்டும்ஆதலால் நூறு கோடிகாலஞ்சென்றாலுமநுபோகமானது ஒருக்காலுந்தவறாது-எ-று. (உ)

இதுவுமது.

சீர்பெறுதன்மஞ்செய்கை தெரிந்ததின்வழியேசென்று
பார்பெறபுத்திபண்ணித் தனக்கதுபலித்திடாது
ஏர்பெறுகருமமெல்லாம் யாவர்க்குமாகாதென்று
தேர்வுறவிடுத்தறத்தை யொல்லையிற்செய்வாதாமே.

(இ-ள்) தன்மமான வகைஎல்லாங் கேட்கக்கடவனுமாய் மேலானபொருளையுத்திபண்ணவல்லவனுமாய் தனக்காகாதகாரியம்யாருக்குமாகாதென்றுகடேசத்தன்மங்களைப் பண்ணுவோம்-எ-று. (௩

இதுவுமது.

சீருடன்வருந்தித்தேடுந்திரவியமதியுஞ்செல்லாத்
தூருடன்பிறவுங்காடுமட்டினிலுடன்போய்மீள்வார்

பாரினில்வாழுநாளில் பண்ணியபாவகன்மை
கூருடன்போந்தாம் கணைஎனக்கூடப்போமே.

(இ-ள) தான்தேடியதனமும்வருந்திபெடுத்த சரீரமுங்கூடப்போகாதுமி த்துருவும் பாந்தவத்தாரும் மயானத்தளவுங்கூடப்போய்மீள்வார்களப்பா ல்தான்தேடியபாவபுண்ணியமிரண்டும்ராமபாணம்போல்கூடப்போம்எ-று.

இரட்சித்தல்.

அந்தணருடனுவுக்கு ஆபத்துவருங்காலததில்
தந்தசல்லுயிரைவிட்டுத் தானதைரட்சித்தானல்
இந்தசற்கசனனம்போயி ஊம்பதுபிரமயோனி
வந்தயிசுவரியவானுய் வாழ்ந்துபின்றேவனுவான.

(இ-ள) பிராமணருக்காவது பசுக்களுக்காவது ஆபத்துவருங்காலத்தில்த ன்னுயிரை விட்டாகிலுமதைரட்சித்தானுமிலவன் நூறுசென்மம் பிராமண யோனியிலேபிறந்து ஐசுவரியனுகவாழ்ந்து பிறகுதேவதத்துவத்தை யடை வான்-எ-று.

அன்னதானம்.

கரிபரியாயிரங்கள் கனத்தகோதானம்பூமி
பரிவொடுரசிதஞ்சொர்ன பாத்திரம்பண்பாமென்று
மிருகுலமொத்தகன்னி கோடிதா னீகிட்டாலும்
அரிதிதுவென்றேயன்ன தானமேயதிகமாகும்

(இ-ள்) ஆயிரம்யானையும்ஆயிரங்குதிரையும் வெள்ளிப்பாதிரஞ்சொர்ன பாத்திரம்நல்ல உபயகுலவிசித்திரமான கன்னியஸ்திரீகளிலேகோடிகன் னி காதானஞ்செய்திட்டாலும் அன்னதானத்துக்குச்சரியல்ல-எ-று.

தன்மஞ்செயல்.

செல்வமுஞ்சடமுந்தானுஞ் சிதமன்றுமாவியென்றும்
அல்லலேசெய்வானென்று மறிந்தவரறிகையாலே
சொல்லலாஞ்சொல்கையாலே தொடர்பேமறலிதன்னை
வெல்லவேயறங்கள்செய்து விடுவர்களறிவுள்ளோரே

(இ-ள்) சரீரமும் ஐசுவரியமும்நிலையல்ல மிருத்துவானவன்தன்னைக்கொ ல்லக் காத்திருப்பதால அவனைவெல்லத்தக்கதாக சுகெத்தன்மங்களைப் பண் ணுவாய்-எ-று. (ஏ)

இதுவுமது.

சுயமாய்செய்தருமந்தன்னிற் றேன்றிடுமிருமடங்கு
அயலார்செய்தருமங்காத்த லன்றியேயவ்வறத்தை
நயமாய்ச்சென்றபகரித்து நத்தியேதானுமொன்றை
வியனுய்ச்செய்தருமமெல்லா மிட்பலமாகுங்காலே

(இ-ள்) தானுதனமாய்ச்செய்கிறதன்மத்திலும் பிறத்தியார்செய்கிறதன் மத்தைப்பரிபாலனம் பண்ணினுலிருமடங்கு பலனதிரமுண்டாக்கத்தன் மத்தைப்பரிகரித்துவேறேதானொருதன்மஞ்செய்தானுகில் நிட்பலனும்எ-று

நற்குலம்விளங்க.

சங்குலில்மதிவிளங்குங் கதித்திடும்பகறகாலத்திற்
செங்கதிர்விளங்குமன்றி சிறந்திடுமூலகமூன்றும்
பொங்கியதனமத்தாலே போனது விளங்குமெனறு
வங்கிஷம்விளங்கும்நல்ல பசுவினுற்றனுமென்றே.

(இ-ள்) இராத்திரிகாலமானது சந்திரனுலேவிளங்கும் பகற்காலமானது சூரியனைப்போலே விளங்குந்தன்மத்தினுலே மூன்றுலோகமும் விளங்கும் வங்கிஷமானது நல்லசற்புத்திரனுலே விளங்கும்எ-று. ௯

கல்விருட்சம்வைத்தல்,

ஓராசாலும்வேம்புமொருபத்துப்புளியுமூன்றுஞ்
சீர்பெறும்விளாவும்வில்வ மூன்றுடன்சிறந்தகெல்லி
பேர்பெறுமைந்துதேக்கும் பெருகுமாவைகதம்பேணி
யார்பயிராக்கிச்செய்தா லவர்க்கில்லைநரகந்தானே

(இ-ள்) ஒருஅரசும்ஒருஆலும்ஒருவேம்பும்பத்துப்புளியும்மூன்றுவிளாவும்மூன்றுவில்வமும்மூன்றுகெல்லியும்ஐந்துதென்னமரமும் ஐந்துமாமரமுமெவனுகிலும்வைத்துப்பயிர்செய்தானுகில் அவனுக்கொருக்காலும் நரகமில்லை, (௰)

நூற்றைவிடகுணவான்மேலெனல்.

குலத்தையுத்தரிக்கநல்ல குணமகவொன்றேபோதும்
நலத்தையிங்கிதத்தைச்சற்றும் நன்றிடாச்சேய்களுறு
பெலத்துடனிருக்கிலென்னும் பெருகிடுமனேகமான
தலததிடையிருந்திலென்னும் விளஙகுதல்மதிதானென்றே.

(இ-ள்) குலத்துக்கெலலாம் நல்லகுணமான சற்புத்திரனெருவன்பே அங்குணமில்லாத பிள்ளைகளிலேனூறுபேரிருந்தாலும் பிரயோசனமில்லை அதன்போலவெவனில் ஆகாசததிலேஅநேக நட்சத்திரமிருந்தாலுஞ் சந்திரனொருவனில்லாவிட்டால் விளங்கப்படாதாம்-எ-று, (௰௧)

தன்தன்கீர்த்திவிளங்கல்,

மதகரிமதத்தினுலும் வாசிவேகத்தினுலும்
பதிமனைவதுவையர்லும் பாவைதன்குணத்தினுலும்
அதிகாரத்திங்களாலு மரசன்றன்னீதியாலும்
விதரணன்கீர்த்தியாலும்மிளங்குவரிலர்கடானே

(இ-ள்) ஆனையானது தன்மதத்தினுலேவிளங்கும் குதிரையானது தன்வேகத்தினுலேவிளங்கும் நாயகியானவள் தன்குணத்தினுலேவிளஙகுவள்ராத்திரியானது சந்திரகுலநதினுலேவிளங்கும் பகற்காலமானது சூரியனுலே விளங்குந்தாதாவானவன் தன்கீர்த்தியினுலே விளங்குவான்-எ-று, (௰௨)

பொருளினுல் துக்கமடைதல்,

தனத்தினைத்தேடத்துக்கந்தானதைச்செம்மைபண்ணி
மனத்துடன்காக்கத்துக்கம் வழங்கியபோதுந்துக்க

மினத்துடன்பொசிக்கத்துக்க மெண்ணியபொருளினாலே
அனைத்தினுந்துக்கந்தானே யிருப்பிடமாகுங்காலே

(இ-ள்) தனத்தைத்தேடுகையிலுந் துக்கம்அதைப்பதனம் பண்ணுகையிலுந்துக்கம் அதுசசித்துப்போகையிலுந் துக்கம்அதைச்செலவழிக்கையில் துக்கம்ஆதலால்துக்கத்துக் கிருப்பிடம்-எ-று, (கங)

தீயவைவிலக்கல்,

சேலித்துத்தன்பாவச் செய்கையுமறிந்துகொண்டு
ஆலிக்கும்பெரியோராகாதொழிலுக்கங்கமரொன்போல்
கூலிக்குக்கழுவிலேறிக் கொளவரோவென்றுமாதச்
சோலிக்குமகைவையார்களறிவினாற்றுலகங்குவோரே,

(இ-ள்) புண்ணியபாவங்களையறிந்த பெரியோர்கள் ஆகாதமொழில்கள் வந்தால் அதையேற்றுக்கொள்ளார்கள் அதன்போலவென்னில் கூலிக்குக்கழுவிலேயிருக்கிறபோகளுண்டோவென்று அந்தத்தொழிலுக் கிசையார்கள்

துற்சனர்செய்கை

துற்சனன்தனக்குத்தானுந் துரைத்தனங்கொடுத்தாலென்றுஞ்
சற்பனைத்துரோகங்கேடு தகவினைத்திடுவரென்போல்
மற்கடந்தானுமாகி வாலிலேதேளுங்கொட்டி
உற்றிடுங்கொள்ளியிந்தாலுமொல்லாஞ்சுடும்போலென்றே

(இ-ள்) துற்சனனானவனுக்குதுரைத்தனம் வந்தால்பழிபாவங்களுக்கஞ்சாமல் கேடுகளைநினைப்பன் அதன்போலவென்னில் குரங்கின்வாலிலேதேளுங்கொட்டிக்கையில் கொள்ளிக்கட்டையுமகபபட்டா லுமொல்லாஞ்சுடும்போல்-எ-று, (கரு)

திடத்தினால் வியாகுலத்தைவெல்லுதலெனல்,

வைத்திடுந்தனத்தாற்சேதம் வளர்ந்திடுமுயிராகுச்சேத
முற்றிடும்வியாகுலங்கள் யாவர்க்குமுளதேஎன்று
புத்திமான்றனக்குத்தானே மனதிலேதேறிக்கொண்டு
சுத்தனாய்க்கைத்தானுமிற் றுயரதுதோற்குமென்றே,

(இ-ள்) யாவனொருவனுக்கு உயிர்சேதம்பொருளசேதம்வந்தால்புத்திமானாயிருக்கிறவன் மனதிலேதேறிக்கொண்டு சகைத்தானாகில் அந்தவியாகுலமானது தோற்றுப்போம்-எ-று, (கசா)

ஒன்றினாலொன்றுசம்பவித்தல்

நிதிதெரிசித்தால்போகம சேரிடுமலர்கடானும்
மதிதெரிசித்தால்வாசமனுகிடுமன்றிகல்லோர்
பதிதெரிசித்தால்முத்தி பலன்றருந்திக்குணத்தால்
சதிசெய்துற்சனரைக்கண்டாற்பாவங்கள்சம்பவிக்கும்

(இ-ள்) அர்த்தத்தைத்தெரிசித்தா லப்போகஞ்சம்பவிக்கும் புட்பத்தைத்தெரிசித்தால்வாசனைசம்பவிக்கும பெரியோர்களைத்தெரிசித்தால்மோட்சஞ்சம்பவிக்கும் துற்சனரைக்கண்டால்பாவஞ்சம்பவிக்கும்-எ-று. (கஎ)

துர்சனர்க்குதவி விலக்கல.

இடஞ்சருக்கிடுக்கண் வந்தா லகற்றுதலென்போலென்னில்
விடங்கொள்தேள்நெருப்பில்வீழ்ந்தா லெடுத்துவிட்டவனைக்கொட்டும்
மடங்கிடாத்துர்சனர்க்கு மருள்செய்யிலென்போற்றங்கள்
திடங்களாலபகாரங்கள் செய்குவர்திண்ணந்தானே.

(இ-ள்) துர்சனனானவனுக்குஒருஆபத்துவந்தபோது அந்தஆபத்தைப்பரி கரிக்கில் அவகடஞ்செய்வான் அதன்போலவென்னில் தேளானதுநெருப்பி லேவிழுந்தாலெடுத்துவிட்டவனையுடனேகொட்டும்அதுபோல்-எ-று. (௧௮)

துர்சனர்கவிகளைபிகழ்தல்-

துர்சனன்முன்னேநல்ல துலங்கியமதுரமான
விற்பனக்கவிதைதன்னை விளம்பிடிலவர்சடங்கள்
அற்பமாங்குணத்தினாலே யவகடஞ்செய்வனெப்போல்
மர்க்கடந்தன்கைமாலை தான்படுவாருமென்றே.

(இ-ள்) துர்சனனானவன்முன்னே நல்லமதுரமான கவிதைகளைச்சொன் னால்உடனேயவகடஞ்செய்வன் அதன்போலவெனில்குரங்கின் கையிலேகொ டுத்தபூமாலையோடொக்கும்-எ-று. (௧௯)

துர்சனன்புலவாயிருந்தும்விலக்குவனெனல்.

செகந்தனிற்புலவராகிச் சேர்ந்ததுர்சனர்களன்னே
அகந்தனிலிருக்குமாகி லவனைக்கைவிடுவனென்போல்
இகந்தனின்மணியினாலேயிலங்கியபாம்பைக்கண்டால்
சுகந்தனைவிடுத்தருண்டு தூரத்தேசெல்வர்போலாம்.

(இ-ள்) துர்சனனானவனுக்கு ஒருஆபத்துவந்தபோது அந்த ஆபத்தைவித் துவானாகயிருந்தும் துர்சனனாயிருந்தாலவனைக்கைவிடுவார்கள் அதன்போல வெனில்பாம்பானது நல்லவிரத்தினங்களினாலே பூசிதமாயிருந்தாலும்சர்ப் பத்தைக்கண்டால்பயந்துதூரவிலகிப்போவார்கள்-எ-று. (௨௰)

வித்துவத்தன்மையறிதல்.

விஞ்ஞையருமைதன்னை விஞ்ஞையரறியவேணும்
புன்செயலறிவிலீனர் புகழ்ந்ததையறியாரென்போல்
விஞ்சியமகப்பேறான வேதனைமலடிதானும்
கிஞ்சிதமறியாளென்போ விருந்திடும்கேழ்விதானே.

(இ-ள்) வித்துவானருமையை வித்துவானறியவேணும் அல்லாதார்க்கறி யப்போகாது அதன்போலவெனில்மலடியானவள் பிரசூதவேதனையறியா ததைப்போல்-எ-று. (௨௧)

ஆபத்துக்குதவா தெனில்

புத்தகந்தன்னில்வித்தை பேரதவேயெழுதிவைத்து
மத்தமேபக்குவத்துக் காமெனவயலார்கையில்
சித்தமாய்க்கொடுத்தபொன்னுந்தேசசஞ்சாரசேயு
முத்தயிக்குருமமூன்று முண்டெனபதுதவாதன்றே.

(இ-ள்) தான்பாடம்பண்ணாமல் புத்தகத்திலேயெழுதிக் கட்டிவைத்திருக்கின்றவித்தையும ஆபத்துக்காலங்களிலுதவுமென்று பிறத்தியார்கையிலே கொடுத்துவைத்ததிரவியமுந் தேசசஞ்சாரமாய்த்திரிகின்றபிள்ளையுமிந்தமூன்றுகாரியங்களு முன்டென்கிறதேயல்லாமல் ஆபத்துக்குதவாது-எ-று.

பாம்புக்குப்பால்வார்த்தால் விஷங்கொடுக்குமெனல்

பாத்திராபாத்திரங்கள் பார்த்தநாள்பசுவுக்கேந்த
மாத்திரந்திரணமீய்ந்தாற் பால்தருமந்தப்பாலை
பார்ததிடிற்பாம்பினுக்கு விஷமதேவளருமன்னே
யேத்தபாத்திரமறிந்து ஈந்திடக்கடவதென்றே

(இ-ள்) சற்பாத்திரமென்றும் அசற்பாத்திரமென்று மிரண்டுவிதமுண்டு அதனைப்போலவெனில் பசுவானதுக்குத் திரணங்கொடுத்தால் பாலைக்கொடுக்கும்அந்தப்பாலைப்பாம்புக்குவார்த்தால் விஷத்தைக் கொடுக்குமாப்போல்-எ

பாத்திரமூன்றென்றறிதல்.

தானமாம்பாத்திரத்தில் விதமதுதான்மூன்றாகும்
ஆனவுத்தமத்தோ டதன்மமூமென்றதாகும்
வானநீர்காய்ந்தயத்தில் வற்றிடுமேவன்சமீதிற்
போனநீருள்ளமட்டும் பொருந்துசிப்பியில்முத்தாமே.

(இ-ள்)தானம்பண்ணுமிடத்தில் உத்தமபாத்திரம்மத்தியபாத்திர அதன்மபாத்திரமென்று மூன்றுவிதமுண்டு அதன்போலவெனில ஆகாசத்திலிருந்து வருஷிக்கிற மழையானது காய்ந்த விரும்பிலே விழுந்தாலொன்று மில்லாமற்சுவறிப்போகும் தாமரையிலேவிழுந்தால் விழுந்தபடியிருக்கும் முத்துச்சிப்பியிலேவிழுந்தால் விலைமதிக்கப்படாதமுத்தை யீனுமாப்போல-எ-று.

அதன்மதானம் செய்தல்.

நிறைபெருசமுத்திரத்திற் பெய்தநீர்மழையுநெய்பால்
குறைவறவுண்டோர்க்கன்னங்கொடுத்தலுங்குபேரனை
பிரபலர்க்கீய்ந்தசொர்ன தானமும்பிறிதுயென்று
விறல்பெறுதானமூன்றும் விறுதாவெனவிளம்பலாமே.

(இ-ள்) சமுத்திரத்திலே பெய்ந்தமழையும் நெய் பால்- அறுசுவையுடன் தனதிஷ்டப்படி சாப்பிடுகிறவனுக்குக்கொடுக்கிற அன்னதானமும்திரவியசம்பன்னனைகையிலேகொடுக்கிறசொர்னதானமுமிந்தமூன்று தானமும்விறுதாவாம்-எ-று. (௨௫)

இதற்குஇதுதுணையெனல்.

அகத்துணைமனைவியாக்கை துணையதார்துணையதாகுஞ்
செகத்தினிற்செல்லுந்தேசாந்திரிக்குநற் சேர்ந்தவித்தை
சுகத்தொடுபரலோகத்திற் றுளங்கியவருளோடென்று
மிகத்தினிற்செய்ததன்மந் துணையதாமியற்றுங்காலே.

(இ-ள்) அகத்துக்குத்துணைமனைவி சரீரத்துக்குத்துணை சகோதரன் தேச சஞ்சாரத்துக்குத்துணை தான்கற்றவித்தை பரலோகத்துக்குத்துணை தான்பண்ணியபுண்ணியபாவம்—எ-று. (௨௬)

தன்சீவத்தை விட்டாலொழிய கொடாதவர்களெனல்.

புலிபுயிர்போகமட்டும் பொருந்தியதவளையியா
வலியுறுவீவன்றானு மறிப்பன்றிப்புறம்வழங்கான்
பொலிவுறுகற்பளாவி போன்றனறித்தனங்களியா
கலிவுறுலோபிசீவ னெழிவன்றியொன்றுநல்கான்.

(இ-ள்) புலியானது தன்சீவன்போனாலொழியத் தோலைக்கொடாது சத்தவீரனாயிருக்கிறவன் தன்சீவன் போனாலொழியப் புறங்கொடான் பதிவிரதையானவள் தன்சீவன்போனாலொழியப் பிரத்தியாருக்கு ஸ்தனங்கொ ர ள்லோபியானவன்தன்சீவன்போனாலொழியஒருவருக்கொருகாசுகொடான்

இன்னதுகற்றால இன்னது நஷ்டமெனல்.

அன்னையேமரித்தால்வாய்க்கு ருசிநட்டமய்யன்றானும்
பின்னையேமரித்தால்வித்தை பேணுதல்நட்டமன்றி
பன்னிடுதுணைவரற்றால் சரீரத்திற்பாதிநட்டங்
தன்னுடபாரியற்றால் சருவாங்கநட்டந்தானே.

(இ-ள்) மாதாமரித்தால் வாய்க்குருசிநஷ்டம் பிதாமரித்தால்வித்தைநஷ்டம் சகோதரன்மரித்தால் சரீரத்திறபாதிநஷ்டம் தன்னுடையபாரியாள் மரித்தால் சர்வாங்கமுநஷ்டம்—எ-று. (௨௮)

பெண்புத்தி பிரளய நாசமெனல்.

எண்புத்திதனதுபுத்தி யியல்பதாமிலதேயாகில்
நண்புற்றமூத்தோர்புத்தி நாசமாமதிலும்பார்க்கிற்
பண்பில்பலபேர்புத்தி நாசமாமகிலும்பார்க்கிற்
பெண்புத்தியதனைக்கேட்டாற்பிரளயநாசமென்றே.

(இ-ள்) யாவனொருகாரியங்களை யாலோசனை பண்ணுமிடத்தில்தன்புத்தியினாலேயாகிறதுஉத்தமம் அல்லது மூத்தோர்புத்திகேட்கில் அதிகவுத்தமம் பலபேர்கள்புத்திகேட்கில்நாசம்பெண்புத்திகேட்கில்வெகுபிரளயநாசமாம்.

விஸவாசதுரோகம் மலையினும்பெரிதெனல்.

உத்தபூமிக்குப்பார மூவரியுமலைகளெட்டு
மெத்தவும்பாரமன்று மிகுத்தபாரங்கள்சொல்லிற்
கத்தனுக்கடுந்துரோகம் கனக்கவேவிசுவாசித்து
வைத்தவர்க்கடுந்துரோக மகாபாரமாகுமன்றே.

(இ-ள்) பூமிக்குச்சத்தசாகரமும் அஷ்டகுலபருவதமும்பாரமல்லஅதிலுமிகுத்தபாரங்கள் சொல்லவேணுமேயானால் கடவுள் காரியங்களுக்கிடைஞ்சல்தேடுகிறதேவெகுபாரம் அதிலும் தன்னை நம்பினபேர்களுக்கு விசுவாசதுரோகம்பண்ணுகிறது எல்லாத்திலுமதிக பாரமானபாவம்—எ-று. ௯

தனக்குத்தான் சத்துருவெனல்.

கடன்படுபிதாவுமெங்கும் கண்டவர்தங்கட்கெல்லா
முடன்படுமன்னைதானு முயர்ந்திடுமேருபந்தானே

யடர்த்திடும்பாரிவித்தை யற்பியாசாதபிள்ளை
தடங்கணாயிவர்களுனக்கு வுசத்துருவாகுமென்றே.

(இ-ள்) கடன்படுகிறபிதாவும் பிறர்க்கனுகூலியாயிருக்கிற மாதாவும்ரூபவதியானபெண்டிரும் வித்தையப்பியாசம்பண்ணாத பிள்ளையுமிவர்களநாலுபேருக்தனக்குத்தானே சத்தருவாகும்—எ-று. ௩௧

கல்லாதான் முருக்கம்பூ வெனல்.

தேசிகமவ்வனங்கள் சிறந்தநற்கலனகண்மிக்க
காசினியிரதன்சொர்னக் கரிபரிபடைத்தாரேனும்
நேசமாம்வித்தையற்று னிறைந்திடுமுருக்கம்பூபோல்
வாசனையிலாவனின்று வயங்கிடும்வாராமன்றே.

(இ-ள) கல்லரூபவனுமா எவ்வர்னனுமா யிரதகெச துரகபதாதிகளபடைத்தாலும்அவனிடத்திலே வித்தையில்லாதிருந்தால் வாசனையில்லாதமுருக்கம்பூவோடொக்கும்—எ-று. ௩௨

கல்விகற்பவன் கற்பகவிருட்சமெனல்.

வித்தையேயுளதால்மாதா பிதாவொடுபோரிவேண்டி
னுற்றிடுஞ்சுகத்தைக்காட்டு முயர்திசையெங்குற்றானு
மெத்தவும்புகழுண்டாகும் விரைமலர்த்திருக்கடாட்சம்
நிததியமுண்டாக்கற்ப விருட்சம்போனிறைந்தவித்தை.

(இ-ள) இயாவனொருவனுக்கு வித்தையுண்டானால் மாதாபிதாபாரி இவர்கள மூன்றுபேருங்கொடுக்கிற சுகத்தைக்கொடுக்கும் அவர்க ளெங்கெங்கத்தேசஞ்சென்றாலு மவர்களுக்கு லட்சுமிகடாட்சமுண்டு வித்தையானது கற்பகவிருட்சம்போலச் சகலசுகத்தையுங்கொடுக்கும்—எ-று. ௩௩

தன்மத்துக்கு நரகமில்லையெனல்.

ஏர்பெருமர்ச்சுனர்க்கு மியம்புவானைவர் தூதன்
ஆரொனும்மாவிகூபந் தடாகமுண்டாகியோர்நாள
நீர்பெறச்செய்தாரேனு நிச்சயமிவர்கடானும்
பேர்பெறுகுலமுமேழும் பெறுகுவர்முத்திதானே.

(இ-ள) அர்ச்சுனனுக்கு கிருஷ்ணதேவர்சொல்லுகிறார் அர்ச்சுனா ஆராகிலும்கிணறுகுளம் வாவிதடாகமுண்டாக்கிஒருநாளாகிலும்சலம்நிற்கப்பண்ணினாராகிலவர்களுக்கொருக்காலு நரகமில்லை—எ-று. ௩௪

பழுதையும் பாம்பென்றுணர்தல்,

உத்தமனிரவில்வேசி யுறுமனைகருகேசென்றால்
மெத்தவுஞ்சமுசியங்கள விளம்பிடுங்கதைநேராக
புத்தமாயிரவுமாகிப் பொருந்தியபழுதைமேலே
சுத்தியேகிடக்கிலையத் தோன்றிடும்போலவாமே,

(இ-ள) உத்தமனாயிருக்கிறவ னிராத்திரிகாலத்திலே வேசித்தெருவீதியில் சென்றால் சமுசியந்தோன்றும் அதன்போல் புத்தமாயிரவுமாகிப் பழுதையுஞ்சுத்தியிருந்தால் சமுசயந்தோன்றும்—எ-று. ௩௫

இவர்கள நரகத்தையடைவரெனல்.

சிறியவூரிருந்தானுறு நம்பனைச்சேவிப்போனும்
பிறியமாய்ப்புலாலுண்பாலும் பெருஞ்சினமனைவியோனும்

வறிஞராய்த்திரிவான்றானு மகவியைத்திரள்பெற்றானு
மறுவகைப்பெயரும்பூமி தனினரகழுந்துவாரே.

(இ-ள்.) சிற்றூரிலேகுடியிருக்கிறவனும் அற்பனைச்சேவிக்கிறவனும்புலா லுடனே போசனம்பண்ணுகிறவனுங் கோபமுடையஸ்திரீயையுடையவனும் பெண்களைத்திரளாய்ப்பெற்றவனுந் தரித்திரவானுமிந்த வறுவகைப்பெயரு ம்பூலோகததிலேதானே நரகத்தையனுபவிப்பார்கள்—எ-று. (௩௬)

கன்னிகைரூபவனை யிச்சிப்பளெனல்.

கன்னியையீயத்தந்தை கலவிமான்றனையேவேண்டுந்
தன்னியமீய்ந்தவன்னை தனபதிதனையேவேண்டு
முன்னியசுற்றத்தார்நல் லுறவினைவேண்டுவார்கள்
மின்னியகன்னிரூப வாளையேவேணடிநிற்கும்.

(இ-ள்.) பெண்களைவாழ்க்கைப்படுத்துமிடத்தில் பிதாவானவன்வித்துவா னுக்குக்கொடுக்க வாசைப்படுவன மாதாவானவள் தனவானுக்குக் கொடுக்க வாசைப்படுவள் சுற்றத்தார் நல்லுறவினுக்குக்கொடுக்க வாசைப்படுவார்கள் அந்தக்கன்னியானவள் நல்லரூபவானுக்கு ஆசைப்படுவாள்—எ-று. (௩௭)

ஸ்திரீகளுக்கு சுதந்தரமில்லையெனல்.

மங்கையைவாழுநாளில வளமொடுபிதாவேகாப்பன்
பொங்கியயெவ்வனத்திற் பொருந்துபத்தாவேகாப்பன்
தங்கியமூப்பிற்றங்கள் தனயரோகாக்குமன்றிச்
சங்கையாமொருகாலத்துஞ் சுதந்தரமில்லைதானே.

(இ-ள்.) பெண்களைவாலிபத்தில்பிதாரட்சிப்பன் எவ்வனத்திலேபுருஷன் ரட்சிப்பன் மூப்பிலேபிள்ளைகள்ரட்சிப்பார்களாகையால் ஸ்திரீகளுக்கொரு க்காலுஞ்சுதந்தரமில்லை—எ-று. (௩௮)

வேண்டுமெனல்.

தேவதைசபைபுராணஞ் செப்பிடுசபைகள்பூமி
காவலன்சபைகளாசான் வயித்தியன்கணிகன்றன்பாற்
போவதுசருமமாகி லெதுவெனும்பொருந்தக்கொண்டு
வீவதுக்ருமமென்றும் வெறுங்காத்தெய்தலாகா.

(இ-ள்.) தெய்வசபைபுராணசபை ஆசாரியன்சபை வயித்தியன்சபைசோ திடஞ்சொல்லுகிறவர்களிடத்திற்சென்று காரியங்கொள்ளவேணடிலேதாகி னும்பொருள்கொண்டுபோகவேண்டும் வெறுங்கையோடேபோகலாகாது.(

சேடமூன்றறிதல்.

அங்கியையவித்துப்பின்னு மவியாதசேடந்தானும்
தங்கியமாதனங்கள் கொடுத்துப்பின்றவிராச்சேடம்
பொங்கியரோகம்மை செயித்துப்பின்போகச்சேட
மங்கிடாச்சேடமூன்றும் வர்த்திக்குமறிந்துகொள்ளே.

(இ-ள்.) அக்கினியையவித்தும் அவியாதசேடமுங்கடன்கொடுத்தும்கொ டாதசேடமுஞ்சததுருவைச்செயித்துச் செயிக்காத சேடமும் இந்தமூன்று சேடமும் மீளவிர்த்திக்கும்—எ-று. (௪௦)

அடுத்தகாரியங்கொள்ளவேணுமெனல்.

ஆதிகாட்பகைஞர்தன்பா லருங்கருமங்கள்வேண்டில்
நீதியாஞ்சுத்தமாக நேயமாய்க்கொண்டுவுற்ற
சோகியாம்கருமமாகச் சேர்ந்தமுற்பகைசயைத்தானே
யேதினுற்றுடங்கலாமோ வம்படியிசைந்துகொள்வார்.

(இ-ள்.) ஆதிகாலமாகப் பகையா யிருக்கிறவ னிடத்திற்சென்று காரியங் கொள்ளவேண்டில் அவனைச்சத்துருவாகக்கொண்டு காரிய முடித்தவாறேப ழையசத்துருவாகக்கொளவார்—எ-று. (௪௧)

காய்க்குப்பாலனமிட்டு தண்டிகையில் வைத்தாலும் குலைக்கின்றகுணம்விடாதெனில்.

இணக்கிடமூர்க்கருக்கு எத்தனைவிதஞ்சொன்னாலும்
வணங்கிதுற்குணம்விடார்கள வளர்த்திடுஞ்சுணங்கனுக்கு
நினக்கொளடாலன்னமிட்டு நிறைந்தபொற்றுடரும்போட்டு
மணங்கொளதண்டிகையில்வைக்கில் குலைத்ததுகடிக்கும்வாறும்

(இ-ள.) துர்சனனவனுக்கு யெத்தனைவிதஞ் சொன்னாலுந் தங்களதுற் குணம்விடார்கள அதன்போலவெனில் நாயானதுக்குநல்லபாலுஞ்சோறும் போட்டு பொற்சங்கிலியும் கழுத்திலேபோட்டுக்கட்டி தண்டிகையில் வைத் துவளர்த்தாலுங் குலைத்துக்கடிக்குமாம்—எ-று. (௪௨)

ஏற்பதிகழ்ச்சியெனல்.

இகலிருவர்க்குண்டாகி லிருவரிலொருவரற்றால்
பகையறுமிருவர்கோபம் பணிந்திடலொருவராலும்
மகவினைப்பெற்றவன்றே மடமின்னர்இளமைபோகும்
புகன்றொருவனபாறசென்று யாசிக்கிற்பெருமைபோகும்.

(இ-ள.) ஒருவருக்கொருவர்பகைத்திருந்தா லிருவரிலொருவர் மடிந்தவா றேஅந்தப்பகைதீரும் ஒருவர்க்கொருவர் கோபித்திருந்தால் இருவரிலொரு வர்பணிந்தவாறேகோபந்தீரும் பெண்களொருபிள்ளைப்பெற்றவாறே யழகு மிளமையும்போம் ஒருவனிடத்திறபோயாசித்தவாறே பெருமைபோகும்—

விதியின்பயனறிதல.

அவரவர்தமக்குமுள்ள வாயிசுந்தொழிலும்பொன்னு
மிவர்களின்வித்தைசெல்வ மெழில்மரணங்களேழும்
தவமுடைப்பதுமவேதன் தான்றதைத்தொடங்கினன்றுஞ்
சிவனுடையருளினாலே கெறபத்திநிச்சயிப்பான்.

(இ-ள.) அவரவர்க்குளள ஆயிசுந்தொழிலும் இலட்சுமிகடாட்சமும் வித் தையுஞ்செலவமும்உருவமு மரணவேதனையுமாகியவேழும் பிரமதேவனான வன் சிவகடாட்சத்தினாலே கெறபந்தில்நிச்சயிப்பான்—எ-று. (௪௪)

குணம்வேறுபாடெனல்.

உறறிடுங்குளத்தில்கொட்டி யாம்பல்பல்லயங்களோடு
மற்றமச்சமுஞ்சனித்து வெவ்வேறுவகையாம்போலே
உறபனத்தொருத்திகெறபத் துடன்பிறந்தார்களேனும்
விறபனச்குணநிறங்கள வேறுபட்டிருக்குமன்றே.

(இ-ள.) ஒருகுளத்திலே கொட்டியும் ஆம்பலும் செய்தலும் தாமரையுங் கூடிச்செனித்தாலும் தன்குணமும் நிறமும் வேறுபட் டிருக்குமாபோ

போல்ஒருகெற்பத்தில்பிறந்தபிள்ளைகளானாலும் அவரவர்குணமும் நிறமும் வேறுபட்டிருக்குமாப்போல்-எ-று. (௪௫)

விதியையனுசரிக்குமெனல்.

வண்டனுசரிக்கும்பூவை மலாதிருனயவான்றன்னைக்
கண்டனுசரிக்குநீதான் கனத்தபள்ளத்தைதேடிக்
கொண்டனுசரிக்குமென்றுங் குலவியவிதிதான்புத்தி
யுண்டெசென்றனுசரிக்கு மென்றறிவாளாகொளவார்

(இ-ள்) வண்டானதுநல்லபுட்பத்தை அனுசரிக்கும் லட்சுமியானவள்நய முள்ளவனை யனுசரிப்பாளதண்ணிரானதுபள்ளத்தையனுசரிக்கும் விதியானது புத்தியையனுசரிக்கும்-எ-று. (௪௬)

மௌனம்கலக்காசனமெனல்.

சீர்பயிர்செய்வோர்க்கில்லை வறுமைகளசெபங்களேனு
மேர்பெறச்செய்வோர்க்கில்லை பாதகமியல்பார்சேர்க்கும்
தேர்வுறுமவுனேர்க்கில்லை கலகமுந்தெளிந்திராவில்
பார்பெறச்சாக்கிரத்தை பண்ணினற்பயமுமில்லை.

(இ-ள்) பயிரிடுகிறவனுக்குத் தரித்திரமில்லைசெபம்பண்ணுகிறவனுக்குபாபமில்லை மவுனமாயிருக்கிறவனுக்கு கலகமில்லை இராத்திரிபகல்சாக்கிறதையாயிருக்கிறவனுக்கு பயமில்லை-எ-று. (௪௭)

நிமித்தியமன்றி கலகப்படுவரெனல்,

மறையவாவேசிகோழி வயித்தியகணங்களைந்து
முறையுடன்றங்களசாதி கண்டிடின்முனிந்துசீறி
குறைபெருகருமமின்றி நிட்கருமங்களாக
நிறைவறச்சண்டைசெய்வ ரவரவாகுணங்கடானே.

(இ-ள்) பிராமணரும்வேசியும்கோழியும் வயித்தியனுஞ்சுணங்கனுமிவர்களைந்துபேருந்தங்களசுயசாதியைக் கண்டவுடனே யொருகாரணமின்றி நிட்காரணமாகச்சண்டையிடுவார்கள்-எ-று. (௪௮)

நிலைதவறினல்வருத்தநேரிடுமெனல்.

கேசமுமுதிரும்பல்லு கிளர்த்தியவேந்துந்நந்தம்
வாசமேயிழந்துபின்னு கறந்துமோரிடங்களசெல்லில்
நேசமேயழிந்துயாரு நிகட்சிசொல்லிடுவார்போல
பேசியமாந்தர்தங்கள் நிலைவிடிற்பெருமைபோகும்.

(இ-ள்) மயிரும் நகமும்பல்லும் இராசாவும் தங்களிடம்விட்டுவேறிடஞ்சென்றால் தங்கள்பெருமையழிந்து பிறராலிகழப்படுகின்றதுபோலயாவருடையநிமைதப்பினலுமவர்களைக்காணக் குறைவாகவிகழ்தலன்றி அபூச்சியத்தையடையச்செய்வார்கள்-எ-று. (௪௯)

தன்மம்பண்ணாதவர்கள் பொருளநாசமடையுமெனல்.

ஊனமேயெவர்க்குஞ்செய்ய துறுபொருளதேடிநல்ல
தானமுந்தவமுமன்றித் தான்பொசிபபதுவுமன்றி
ஈனமாய்ப்புதைத்தோத்த மெரிமன்னன்சோரன்றேய
மானகால்வகைக்குமாகில் நசித்திடுமறியுளளோரே

(இ-ள்)யாதாமொருவன்கண்டபேருக்கெல்லாம்மிடுக்கமபண்ணித்திரவியத்தைத்தேடி தானுமுண்ணாமலும் புதைத்துவைத்ததிரவியமானது அக்கினி

யினாலும் சோரனாலுந் தண்ணிராலும் இந்நாலுவகையாலும் நசித்துப் போகும்-எ-று. (௫௰)

கற்புடையமகளிர் ஒழுக்கமறிதல்

தாசிபோல்பணியில்பத்தி தன்னிலேயமைச்சுபோலும்
தேசினிற்றிருவிளூட்டுஞ் சினேகத்திலன்னைபோலும்
மாசிலாப்பொறைக்குபூமா தென்னவமருவுகாலில்
வேசிபோற்குணமீதாறு மிருந்தகற்பினுக்குநன்றே.

(இ-ள்) ஸ்ரீயானவள வணக்கத்திலேவந்தால் அடியாளைப்போலவும்புத்தியிலேவந்தால் மந்திரியைப்போலவும் ரூபத்திலேவந்தால்லட்சுமியைப்போலவும் சீரட்சணையிலேவந்தால் மாதாவைப்போலவும் பொறுமையிலேவந்தால் பூமாதேவியைப்போலவுஞ்சயனத்திலேவந்தால்வேசியைப்போலவும்இந்தஅறுவகைகுணமுள்ளவள பதிவிரதை—எ-று. (௫௧)

கூடாமகளிர்குணமறிதல்.

தலைவனோடெதிர்த்துச் சிறுதனந்தேடித்தானும்
பாலனுகூலியாயும்பத்தமுன்னசனஞ்செய்துங்
கலகமாயொருவர்பேச்சையுரைத்துபோர்காணுவாளு
நலமிகுசேய்கள்பெற்றும்பெருகினும்விடுவர்நல்லோர்

(இ-ள்) பத்தர்வுடனேயெதிர்த்து வார்த்தைசொல்லுகிறவளுஞ்சிறுதனந்தேடுகிறவளும் வாயுருடனுக்கனுகூலியாயிருக்கிறவளும் பததாவுக்குமுன்னேயசனம்பண்ணுகிறவளு மொருவார்த்தையை யொருவருக்குச்சொல்லிக்கலகஞ்செய்கிறவளும் இவர்கள அதிகமானபிளளைகள பெற்றாலும்கைவிடுவார்கள-எ-று. (௫௨)

கைத்தொண்டுசெய்பவர்பெரும்பயனறிதல்

உத்திடுமெண்ணெய்காணு மூடேத்திடுவறையோர்க்கங்கம்
பத்தியேபிடிக்கப்பின்னும் பறித்தவருண்டவெச்சில்
நத்தியையெடுக்கக்கோவை நயந்துதன்னுகிராற்கிற
நித்தியங்கோடியெக்கிய பலன்தருநிசழத்துங்காலே.

(இ-ள்) பிராமணருக்கெண்ணெயதேயத்து அங்கவர்க்கதனைபண்ணவும் அவாகளுணடவெச்சிலெடுக்கவும் பசுவைதன்கையாற்றேப் பசுவுக்குத்திரணங்கொடுக்கவிவர்களுக்குநித்தியங்கோடியெக்கியம்பண்ணினபலனறும்

இன்னார்செய்தபாவமின்னாரைச்சேருமெனல்.

பூமியிற்சனஞ்செய்பாவம் பொருந்தியவேந்துக்காகும்
கோவினாலுற்றபாவம் புரோகிதற்கென்றுகூறும்
பாவகவில்லாள்பாவம் பத்தாவுக்காகுமென்றும்
ஏவல்செய்சீஷன்பாவங் குருவினுக்காகுமென்றே.

(இ-ள்) பூமியிற்சனங்கள்பண்ணினபாவம் இராசாவைக்காகும் இராசா செய்தபாவம்புரோகிதனைக்காக்கும் ஸ்திரிசெய்தபாவம் புருஷனைக்காக்கும் சீஷன்செய்தபாவம் குருவைக்காக்கும்-எ-று. (௫௪)

பிராமணர்களை அரசன்காக்காவிடில் உலகமகாசமடையுமெனல்

வேர்தொருதருவுஞ்சாய்கை யிருத்தமகதிரியுமபூமி
போக்கிடுமில்லையின்மூலம பூசுரர்க்காகுமாதல்

வாய்ந்திடுமறையோர்தம்மை மன்னவன்காப்பனல்லால்
சேர்ந்திடுமூலத்தோடு நாசமார்தின்னணந்தானே.

(இ-ள) இராசனொருவிருட்சமும் மந்திரியொரு சாய்கையும் பூமியொரு யிலையும் பிராமணர்மூலமானபடியினாலே இராசாவானவன் பிராமணரைக் காக்கவேணும் இல்லாதிருந்தால்மூலத்தோடுநாசமாம்-எ-று. ௫௫

பிராமணர்களைத்தெய்வமென்றுணர்தல்.

செகமெலாந்தெய்வாதீனந் தெய்வமந்திரத்தாதீன
மகம்பெறுமந்திரந்தான் மறையவாதன்னாதீனம்
இகபரமிரண்டுந்தானு மியைந்திடுமறையோர்தானே
அகம்பெறுமிந்தநாலா லவர்களேதெய்வமாமே,

இ-ள. செகமெலாந் தெய்வத்தினுடைய ஆதீனம் தெய்வம் மந்திரத்தினு டையஆதீனம் மந்திரம் பிராமணனுடையஆதீனமாகையாலேபிராமணனே தெய்வமாம்-எ-று. ௫௬

துர்ச்சனன்வசிக்குமூரைவிட்டுவிலகுமெனல்.

வண்டிற்குமுழமைந்தாகும் வாசிக்குமதுவேபத்தாங்
கண்டுற்றகரிக்குத்தானு மாயிரமுழங்காணென்ப
வண்டுற்றகுழலாளிந்த வையகந்தன்னின்மீது
மிண்டுற்றதுர்ச்சனன்ற னிருக்குமூர்விட்டுப்போமே,

இ-ள். வண்டியைக்கண்டால் ஐந்துமுழம்விலககவேணும் குதிரையைக்க ண்டால் பத்துமுழம்விலககவேணும் யானையைக்கண்டால் ஆயிரமுழம்விலக வேணும் துர்ச்சனனைக்கண்டால் அவனிருந்தவூரைவிட்டு ஓடிப்போகவேணு ம்-எ-று. ௫௭

தன்மத்துக்கு விகாதஞ்செய்தவர் அகோரநரகில்
அடைவரெனல்,

தீர்க்கமாயொருவர்தன்மஞ் செய்யவேசித்தித்தேத்துஞ்
சேர்க்குநாளதற்கிடுக்கண செய்யவேதுணிந்துதானும்
வாக்கினாற்சடத்தாலன்றி மனதினால்வடுக்களசெய்து
ஆக்கிடாவகைசெய்தார்க ளகோரமாநரகில்வீழ்வார்.

இ-ள. யாதாமொருவன் ஒருகாரியத்தைச்செய்யவேணுமென்றுமனதில் உத்தியோசிக்குமிடத்தில் அதை வாக்கினாலுஞ் சடத்தினாலும் விகாதம்பண் ணியந்தத் தன்மனத்தைவிலக்கினானாகில்-அவன்அகோரமான நரகத்திலேவி ழுவான்-எ-று. ௫௮

நீச்சனானாலுந தன்மஞ்செய்வானாகில்
பதவியையடைவானெனல்,

மாயிருஞாலந்தன்னிற் றன்மத்தின்கருமம்வந்தால்
நேயமாஞசடத்தால்வாக்கால் நிதியினாலெதுவேயேனு
மீதலாற்சாயஞ்செய்தா லெண்ணிருநீசரேனும
ஆயிரங்கோடிகாலம் அமருலகாளவென்றே.

இ-ள். பூலோகத்திலே யாதாமொரு தன்மகாரியம்வந்தபோது சரீரசகா யம்வாக்குச்சகாயம் அர்த்தசகாயஞ்செய்து யந்தத்தர்மத்தை நிறைவேற்றி னானால் அவன்நீசனானாலும்ஆயிரங்கோடிகாலம்தேவலோகத்தையாளுவான்.

இன்னதனால்இன்னதழியுமெனல்.

மின்னமைவிபசாரத்து மிகுத்திடுந்தவத்தில்நன்மை
மன்னியகோபத்தாலு மற்றநீருவட்டினாலும்
பன்னிடுமறையோர்நன்மை பார்மின்னாளசோதலாலு
மன்னவன்அநீதத்தாலு மழிந்திடும்நன்மைதானே.

(இ-ள்) ஸ்திரீகளுடைய நன்மைவிபசாரத்தினாலேயழியுந்தபசிகளுடைய நன்மைகோபத்தினாலேயழியும் சலத்தினுடைய நன்மையுளவரினாலேயழியு ம்பிராமணனுடைய நன்மைஸ்திரீ பரபோகத்தினாலேயழியும் இராசனுடை யநன்மை அநீதந்தால்அழியும்-எ-று. ௬௰

இதனால்இன்னதாகலமெனல்.

தூசுறுநீர்க்குச்சீதந் துலங்கியதோழனுக்கு
நேசம்வஞ்சனையிலாமை நேரிழைகுணமேயாகும்
பேசிடும்பேச்சில்நன்மை பெருகுமாதரவுதானே
போசனந்தனக்கிதெல்லாம் பொருந்துரோசங்களாமே.

(இ-ள்) சலத்துக்கு ரசங்குளுமை தோழனுக்கு ரசம்வஞ்சனையிலாமைஸ் திரிகளுக்கு ரசங்குணம்விசேஷத்துக்கு ரசமிங்கிதமானவார்த்தைபோசன த்துக்குரசம் அன்புடனேயன்னமிடுகை-எ-று. ௬௧

இன்னதனால் இன்னதுதன்மைப்படுமெனல்.

ஆசனமெண்ணெயோடே போசனமிவைகள்மூன்றும்
மாசுரத்தன்கையாலே வழங்கியேகொண்டானாகில்
பேசிடுமாயுள்நாசம் பெருத்திடுமைந்தர்நாசம்
தேசுறுமலராள்தானு மிருந்திடாள்செய்யுங்காலே.

(இ-ள்) தன்கையிலேஆசனம்போட்டுக்கொண்டால் ஆயிசுநாசம் தன்கை யினாலே எண்ணெய்தேய்த்துக்கொண்டால் புத்திரநாசம் தன்கையினாலேஆ போசனம்வார்த்துக்கொண்டால் ஐசுவரியநாசமாம்-எ-று. ௬௨

விதிவசத்தைவெல்லக்கூடாதெனல்.

மதகரிபாம்புபுள்ளு மனிதராற்கட்டுண்டெய்து
மிதமுளமதியும்பானும் இராகுபாலிடையுறுற்று
சிதமுளமுத்திமானைத் தரித்திரஞ்சேர்தலாலும்
விதிவசமொருவராலும் வெல்லுவதரிதாமென்றே,

(இ-ள்) மதயானைகள் பாம்புகள்-பட்சிகள்-மிருகங்கள இவைமனிதர்கையி ல்கட்டுப்படுகின்றதுஞ் சந்திரசூரியாள இராகுகேதுவினாலே பிடிபடுகிறது ம்புத்திமானாகவிருக்கிறவன் தரித்திரத்தில்டிபடுகிறதும் இவையெல்லாம்வி திவச மாகையினால் விதிவசத்தை வெல்லக்கூடாது-எ-று. ௬௩

உற்பாதவேலைசெய்பவன்இடுக்கமடைவனெனல்,

புத்தியில்மிகுத்தவானாய் போதவேயிருந்தானாகில்
மெத்தவுமலடனாதலவதுமிடியனாதல்
உற்றிடுங்கருமமூன்று முளளதாயுரைக்குங்காலே
பெற்றவர்பாயிசாகிப் பெருக்கவேயுண்டாவென்றே.

இ-ள் யாதாமொருவன் புத்தியிலேஉம்பாத புத்தியாயிருந்தானாகில் அவன்மலடனாகுதல் மிடியனாகுதல் மற்பாயிசுவாகுதல் இந்தமூன்றுகாரியத்திலேயொருகாரியந்தவறாது-எ-று. (௬௪)

லவுத்துவஞ்சேரும்வகையறிதல்.

வாலையோடிணக்கமன்றி மரிப்பன்றீச்சிரித்தல்பின்பால்
சாலவேசண்டையென்றுந் தறுகணாளரைச்சேவித்தல
கோலியேகழுதையேறல் கூத்தியார்பாலில்வார்த்தை
சீலமாயுரைக்கில்தானும் லவுத்துவஞ்சேருமன்றே.

இ-ள், சிறுபிள்ளைகளுடனே யிணக்கமுங்காரியமில்லாமல் அவலமாகச் கைக்கிறதும்ஸ்திரீகளுடன் சண்டைப்படுகிறதும் துன்மார்க்கரைச் சேவிக்கிறதும் கழுதைமேல்சவாரிசெய்கிறதும்தேவடியாளிடத்திலேஆசைவார்த்தைசொல்லுகிறதும் இவையெல்லாந் தனக்குலவுத்துவஞ்சேரும்-எ-று. ()

பாம்பின்கீழ்எலிவசிக்கிறகுணமிவையெனல்,

அடுத்தங்கேதனைச்சேவிப்போ ரவர்கள்மேற்குறைசளவித்தம்
தொடுத்தங்கேதினமபாராட்டத்தொல்வழக்கிடுவோர்தங்கள
இடத்தினிலிருந்துவுண்டியயற்றுதலெல்லாம்பாம்பின
படத்தினகீழெலியின்வாழ்க்கைபண்ணுதல்போலாமென்றே.

இ-ள், தினந்தினங்குற்றந்தேடுகிறவனிடத்திலேசேவிக்கிறது எப்படியென்றால் எலியானதுபாம்பின்படத்தின் கீழே குடிவாழ்க்கை பண்ணுதல்போலாம்-எ-று. ௬௬

தரித்திரனுக்குஅளவில்லாதசிந்தையெனல்.

வேந்தருக்கரசிற்சிந்தை மிகுந்தகாமுகருக்கெல்லாம்
போந்திடுகாமச்சிந்தைபொருந்துயோகிக்குமுத்தி
வாய்த்திடுவழிமேல்சிந்தைவறிஞருக்களவில்லாத
நீக்கொணாச்சிந்தையென்றுநீணிலத்தியங்குந்தானே.

இ-ள். இராசாவுக்கு இராச்சியத்தின் பேரிற்சிந்தை எவ்வண்ணஸ்திரீகளுக்குகாமத்தின்பேரிற்சிந்தையோகியாளுக்குமோட்சத்தின்பேரிற்சிந்தைதரித்திரவானுக்கு அளவில்லாதசிந்தை-எ-று. ௬௭

சுகமறிதல்.

கூபநீரால்நீழல்ருலவியபாவடக்கு
சாபமாம்புருவமாதர்தனங்கள்தானிவைகளபானு
கோபகாளகுளிர்ச்சியாயுங்குளிர்ச்சிகாளவெச்சென்றாயு
சோபமேதீர்த்துநல்லசுகத்தினையளிக்குமென்றே.

இ-ள், கிணற்றுநீரும்ஆலமரத்துநிழலும்வடக்குப்பார்த்த மச்சுவீடும் எவ்வாணமானஸ்திரீகளுடைய ஸதன்னியமும்இந்நான்கும் கோடைகாலத்துக்குச் சீதளமும் சீதளகாலத்துக்கு வெப்பமாயிருந்துசகல சுகத்தையுங் கொடுக்கும்-எ-று. ௬௮

வருத்தந்தெரியாமல் தாங்களடைவதைப்பற்றிப்
பிடிவாதஞ்செய்தல்.

சிறுவருந்தீயந்தானுந்தெரிவையர்வேந்தர்மாதர்
பொருளதுவேணும்வேண்டிபோந்தவர்கேட்குகாளிற்

பொருபொருளுண்டேயில்லை யென்பதுமுணர்தங்கள்
பெறுவதுகருமமாசப் பேசுவார்விடாமற்றானே.

இ-ள் சிறுபிள்ளைகளும் அக்கினியும்ஸதிரீயும்ராசாவும்மாதாவும் இவர்கள்ஏதாகிலுந் தங்களுக்குவேண்டியதுகேட்கு மிடத்திலுண்டெனகிறது மில்லையென்கிறதுமறியார்கள்தாங்களபெறுவதுகருமமாகப் பேசுவார்களஎ-று.

மலைமருந்தால் சரீரஉபத்திரந்தீருமெனல்.

அன்னியன்றானுமாகி விதங்களையருளினானல்
உன்னியசுற்றத்தாருமுயர்ந்திடுஞ்சுற்றமாகிப்
பன்னியவதிதமேனும் பண்ணினால்விட்டுமெய்யில்
மன்னியபிணிக்குகாட்டின் மருந்தினால்தீருவ்வாறே.

இ-ள். அன்னியனாகவிருந்தும் அநீதங்களைச்செய்வானாகில் அவனைப்பந்துவாகக்கொள்வன் பந்துவாகவிருந்தும் அநீதத்தைச்செய்வானாகில்அவனைக்கைவிடுவார்கள அதன்போலவெனிற்சரிரத்திலேகூடப் பிரந்தவியாதிக்குக் காட்டிலுள்ளமருந்தினால்தீருமப்போல-எ-று. ௭௰

துர்சனர்மனது வயிரமெனல்

சற்சனன்தனக்குநன்மை தான்செயிற்றாமுஞ்செய்வார்
துற்சனன்றனைக்கண்டாற்றுசந்தவர்முனிவரொன்போல்
நற்குணகல்லையுதில்நீர் தருநலமெண்ணாமல்
மற்றொருகல்லால்மோதிற்கனற்பொறிவழங்குவாரும்.

இ-ள். சற்சனனானபேருக்கு நன்மைசெய்தால் தாமுநன்மைசெய்வார்கள்துர்சனரைக்கண்டால் கிட்டசேரவொட்டார்கள் அதென்போல வெனில் நல்லகுணமாயிருக்கின்ற சலவைக்கல்லை வாயினாலூதினால் சலத்தைக்கொடுக்கும்மற்றொரு கல்லால்மோதினால் நெருப்புப்பொறி பறக்கும் அதுபோல்.

கற்றவர்களுக்கு எங்குஞ்சிறப்பெனல்

மூற்கனிலளவுமட்டு மூயன்றிடுங்கிராமணிக்கு
மேற்கின்றன்பதிக்குமற்ற விறைவனுமியங்குமென்றுங்
காற்கின்றபுலிக்குமேனாக் கற்றவர்தேசமெங்கு
மாக்குநல்விடங்களெல்லாம் பூச்சியனாவனென்றே.

இ-ள. மூர்க்கனானவன் தன்கிரகத்துக்குமாத்திரம் கிராணியானவன்கிராமத்தளவும் இராசாவானவன் தன்தேசத்தளவும் வித்துவானானவன் எந்தெந்ததேசததிற்சென்றாலும் பூச்சியனாவான்-எ-று. ௭௨

மூர்க்கன்செய்கையறிதல்.

துற்சனன்முகங்கடானுந் துலங்கியகமலம்போலும்
சுற்சனனென்னும்வார்த்தை சந்தனக்குளுமைபோலும்
உற்றிடுமிதயந்தானுமுறத்திடும்வயிரம்போலும்
முற்பெறவிருக்குமந்தமூர்க்கர்தன்குணங்கள்தானே.

இ-ள. துர்ச்சனன்முகமானது தாமரைக்கமலம் போலும்வார்த்தையானது சந்தனக்குளுமைபோலும்இருதயமானது வயிரம்போலுமிப்படியிருக்கும்

தன்மம்ஒன்றுகோடியாய் விருத்திக்குமெனல்.

எடுத்திடில்விசயனன்பு யேகமாயெடுத்திஒன்றை
தொடுத்திடிற்பத்துமாகில் விடுகிலத்தொண்ணூறுகு
மடுத்ததைவிட்டவாறே ஆயிரமாகிலெக்கிற்
றடுத்திடுங்கோடிபோல மறைவல்லோர்க்கீயுந்தானம்.

இ-ள். அர்ச்சுனன்கையம்பானதுஎடுக்கும்போதுஒன்றாகும் தொடுக்கும்போதுபத்தாய்விடும் விடும்போதுநூறாய்விடும் விட்டபோதேஆயிரமாகும் லெக்கிலேபடும்போது கோடானகோடியாய்விழும் அத்தன்மைபோல வித்துவான்கையில்கொடுக்கிறதானமு மப்படிவிருத்திக்கும்—எ-று. ௭௪

தியாகிகளுடையலட்சணமறிதல்.

ஆடவர்தன்னிற்றியாகி பாரெனிற்றனமுந்தேடி
மாடுறப்புதைத்துண்ணாமல் வழங்குதலன்றிவைத்து
வீடியேபோவான்றியாகி விளங்கியவுயிர்க்குமுத்தி
தேடியேயித்துமுண்டுஞ் செல்பவன்றியாகியாமே.

இ-ள். உலகத்திலேதியாகியாரென்னில் அர்த்தத்தைத் தேடிவைத்து வழங்காமலுந்தானுண்ணாமலும் புதைத்துவைத்தவன் தியாகியல்லஅர்த்தத்தை வழங்கியுந்தான்புசித்தும் பரலோகத்துக்குவழிதேடினவன்தியாகியாம்.

பஞ்சமாதாக்களுடைய விவரமறிதல்.

தனமாதாகுருவின்தேவி தனக்குமூத்தவன்றன்தேவி
மன்றேவிதேவிமாதா வண்மையாமிவர்களைந்தும்
பன்னூலின்படியாராய்ந்து பாங்குடனிவர்கள்தங்கள்
தன்மாதாச்சமானமென்று நல்லறிவாளர்கொள்வார்.

இ-ள். தன்னுடையமாதா குருவினுடையதேவி தன்தமயன்தேவி இராசாவின்தேவிமாமியார் இந்தஐந்துபேரும் தனக்குத்தாயென்றுசொல்லப்படும்

பிதாக்களவிவரமறிதல்.

தன்னையேயின்றோன்வித்தை சாத்திரோபதேசங்கள
பண்ணினோனொளித்துவந்தோன் பயந்தவிர்த்திடுவோன்பஞ்ச
முன்னியேகாலத் தகந்தன்னங்கொடுப்போனைந்தும்
நன்மையாம்பிதாவாமென்று நல்லறிவாளர்கொள்வார்.

இ-ள், தன்னைப்பயின்றவனும் வித்தையப்பியாசம் பண்ணிவைத்தவனும் உபதேசம்பண்ணினகுருவும் பயந்தொளித்துவந்தவனைப் பயப்படாதேயென்றுசொன்னவனும் பஞ்சகாலந்திலேஅன்னங்கொடுத்தவனும் இந்தஐந்துபேரும்பிதாவென்றுசொல்லப்படும்—எ-று. ௭௭

தாதாவென்றுகீர்த்திபெற்றவன் லட்சத்திலொருவனெனல்

சதத்திலேயொருவன்சூரன் சாற்றியவாயிரத்தி
லிதத்துடன்வித்துவானா மென்பதினாயிரத்தில்
விதத்துடன்சபையில்வார்த்தை விளம்புவான்லட்சத்தொன்றிற்
பதத்துளதாதாவுண்டோ வில்லையோபகருங்காலே.

இ-ள், நூறுபேரிலே ஒருவன்சூரனாயிருப்பன் ஆயிரம்பேரில்ஒருவன் வித்துவானாயிருப்பன் பதினாயிரம்பேரில்ஒருவன் சபையில் வார்த்தைசொல்லவல்லவனாயிருப்பன் லடசம்பேரில்ஒருவன் தாதா உண்டோயில்லைதெரியாது

செய்யுளளவளையில் தீபமெரியுமெனல்,

தளிகையிற்செய்யைவார்த்துத் தானெடுத்திடுந்தீபத்தி
வெளிதெனவதனிற்றீப மேற்றினாலதற்குன்றில்லை
நளினமின்னுளளமட்டுஞ் சிலவினாற்சேதமாமோ
தெளிதிருவற்றாலெண்ணெ யெய்திடாத்தீபமாமே,

இ-ள், விளக்குநிறையநெய்யைவிட்டுத்திரியும்போட்டு எரிகிறதீபத்தி லநேகந்தீபமேற்றினாலுந் திரியும்நெய்யுமுள்ளமட்டும் அதற்குத் தாழ்வில்லை அதன்போலவெனில் இலட்சுமிகடாட்சமுள்ளமட்டும்செலவிட்டதினால்சேதமுண்டோ லட்சுமிகடாட்சந்தப்பினால் எண்ணெயில்லாததீபந்துலங்காது

குழந்தைகளுக்கு அழுகைசலுகையெனல்,

புளளுக்குபெலமாகாயம் பொருந்துமீன்றனக்குநீராம்
எளளுற்றபேதைக்குற்ற விறைவனேபெலமதாகுந்
தெளளுற்றசிறியோர்க்கென்று மாற்றுகைபெலமதாகுங்
களளுற்றகுழலாய்நாலும் பெலமெனக்கண்டுகொளளே.

இ-ள். பட்சிகளுக்குபெலம் ஆகாயம் மச்சங்களுக்குபெலம்சலம் ஸதிரீகளுக்குபெலம் தன்புருஷன் சிறுபிள்ளைகளுக்குபெலம்அழுகை—எ-று. ௮௰

வேம்புக்குகசப்பும்-மருவுக்குவாசனையும தனகுத்தானே
உற்பத்தி யெனல்,

நற்குணத்துற்குணங்கள் மனிதர்க்குமிடையில்நன்றுஞ்
சற்குணத்துற்குணங்கள சடமெடுப்பளவேயுண்டாம
பற்கசப்புருவேம்புக்கும பகர்மணமருவினுக்கும
உற்பனகாலந்தன்னி லுதித்திடுமபோலவாமே.

இ-ள். மனுஷருக்குநல்லகுணமும பொல்லாதகுணமுஞ் சரீரமெடுக்கச்சேதானேஉண்டாகிறதல்லாமல் இடைகடுவேவரமாட்டாது அதென்போலவெனில் வேமபுக்குக்கசப்பும மருவுக்குவாசனையும பிறக்கச்சேதானேகூடப்பிறக்குமாபபோல—எ-று. ௮௧

இவர்களிடத்தில்லட்சுமியிராளெனல்,

அழுக்குப்பல்வழுக்குத்துகி லதிகபோசனத்தானென்று
மொழுக்கதகெட்டோங்க ளுரைப்பவனுதயகாலம
பழுதற்றசாயுங்காலந் துயிலபவன்றனைப்பார்த்து
இழுக்குற்றமலராமாலோ டாகிலுமிராள்காணென்றே

இ-ள் அழுக்குப்பல்லோடிருக்கிறவன் அழுக்குப்புடவையோ டிருக்கிறவன் அதிகபோசனம்பண்ணுகிறவன் எந்நேரமுமகெட்டவார்த்தைசொல்லுகிறவன் உதயகாலஞ்சாயங்காலம நித்திரைபண்ணுகிறவன் இவர்களிடத்தில இலட்சுமியிராள்—எ-று. ௮௨

இன்னதுபொசிப்பவரிடங்களில் பத்தியிராதெனல்.

அத்திக்காய்கோவைதேததானை விரலிக்காய்வெள்ளைக்
கத்திரிசோற்றுக்காந்தல் கணடிகையாவரோனும்
கத்தியேயுண்பார்க்கெல்லா காரணன்றனின்மீது
பத்திதான்வாராதென்றும் பரமனார்அருளினரே,

(இ-ள்) அத்திக்காய்-கோவைக்காய் தேத்தான் காய்ஐவிரலிக்காய்வெளளை க்கததிரிக்காய்-சோற்றுக்காந்தல் இவைகளபொசிக்கிறபோர்களுக்கு தெய்வ பத்திவராது-எ-று. ௮௫

இவைகளுக்குஎச்சிலிலையெனல்.

மதலைநீரிடுமிடங்கண மகிட்சியாயிரவில்மின்னார்
அதரபானங்களவேட்டை யாடியநாய்களகவ்வி
யுதவியமிருகந்தானு முணர்ந்ததோர்கிளிகளகோது
மிதமுளகனிக்குமென்று முச்சிட்டமில்லைதானே

இ-ள. குழந்தைகள நீரிடுமிடத்தும் ஸ்திரீகளுடைய அதரபானத்துக்கும் வேட்டைநாய்கடித்த மாங்ஷிஷத்துக்கும் கிளிகள கோதியபழத்துக்கும் இவைகட்கெல்லாம்எச்சிலில்லை-எ-று. ௮௬

உற்றபாக்கிலையுமென்று மிடைவிடாதோடுநீரும்
நற்றியேகருப்புக்கட்டி பாலொடுதானூன்றாய்
சொற்பயில்தோகையோடுஞ் சாராபானம்பிசிதமெல்லா
முற்றமேபார்க்குநாளி லுச்சிட்டமில்லைத்தானே

இ-ள். பாக்குவெற்றிலைகக்கும் இடைவிடாமலபெருகிவருகிறசலத்துக்கும் கருப்புக்கட்டிக்கும் பாலுக்கும்-தேனுக்கும்-ஸதிரிகளுடைய அதரபானதது க்கும் எச்சிலில்லை-எ-று. ௮௭

ஒருகையினால் ஏற்பதில்கொடுக்கார்கள அடையும்பலனறிதல்.

பாக்குவெற்றிலையுங்கந்தம் பரிமளமலருநூசுந்
சேர்க்குமாபரணமெல்லாஞ் சிறந்தொருகரத்தால்வாங்கித்
தூக்கியோர்தந்திடுவோர்க்கென்றுந் துலங்கிடுபேசீர்நாடோறுந்
தாக்கிடுமாயிசுண்டாய்த் தானும்வீற்றிருப்பனென்றே

இ-ள. பாக்குவெற்றிலையுங் கெந்தகஸ்தூரி பரிமளசுகந்தாதிகளும் ஆடையாபரணங்களும் ஒருகையிலேவாங்கினால் கொடுக்கிறவனுக்குஐசுவரியமும் கீர்த்தியும்அடைந்திருப்பான்-எ-று. ௮௮

இன்னவைகளசோந்தால் இன்னவைகள்விடுவனெனல்.

வாசிவந்திற்றால்சேர்னை மறந்துகைவிடுவர்நல்ல
வேசிவந்துற்றால்பாரிதன்னையே வேண்டாமென்றுந்
தூசுசாத்திரங்களவந்தால் மறைதொகுத்தேவரனவேண்டிற்
றேசிகன்மருகன்வந்தால் சேயினைமறப்பனென்றே

இ-ள. குதிரைகை கைவசமாய்வந்தால் பசுவைராட்சிப்பதைவிடுவன்தாசி வந்தால் பெணசாதிகைவிடுவன் சாஸ்திரம்வந்தால்வேதத்தைக்கைவிடுவன மாப்பிளளைவந்தால் மகனைக்கைவிடுவாள-எ-று. ௮௯

வைகுந்தத்தையும்கயிலாசத்தையும்வேட்டகத்துக்குசமன்கூறல்,

சீர்பெறுமவர்க்குமற்றச் சிறுமையோர்தமக்குவேட்ட
ஏசக்மினிநாமென்போல் பொருந்திடும்பிறந்தயில்லம்

பார்பெறக்கடலில்மாலும பளளிகொண்டிருந்தாளீசன்
ஏர்பெறுமுடையாளில்லவ் கிரியின்மேலிருந்தானென்றே.

இ-ள். அயிஸ்வரியவானுக்கும் தரித்திரவானுக்கும்வேட்டகத்திலேயிச்சை யாயிருக்கும் அதன்போலவெனில் மகாலட்சுமிக்குப் பிறந்தகமானதிருப்பா ற்கடலிலே மகாவிஷ்ணுபளளிகொண்டார் ஈஸபரிக்கு ப் பிறந்தகமானமலே யிலே வெள்ளியங்கிரியில் ஈசுரன்எழுந்தருளினர்-எ-று. ௮௮

ஸதிரிகள-சதுர்யுகத்திலும் யமனுகுவரோனல்,

முந்தினயுகத்தில்ரேணு முதிர்திரேதாயுகத்தில்
வந்திடுஞ்சீதைபின்னும் வளர்துவாபரயுகத்தில்,
சுந்தரஞ்சேருமந்த துரோபதைமூன்றுங்கூத்தாம்
அந்தமில்கலியுகத்தில் அகத்தொருகூற்றுமென்றே.

இ-ள். கிரேதாயுகத்திலே ரேணுகாதேவி கூற்றுவனுகவிருந்தாள்திரே தாயுகத்திலேசீதேவி கூற்றுவனுக விருந்தாள துவாபர யுகத்தில் துரௌப தைகூற்றுவனுகவிருந்தாள் ஆகையினலே மூன்றுயுகத்துககும்கலியுகத்துக் குத்தந்தன்மனைவிகள கூற்றுவனுகவிருந்து அழிப்பார்கள-எ-று. ௮௯

பிரதியுபகாரம்பெறுதார் விவரமறிதல்.

நதிபலவானமூன்று நலந்தருமுபகாரங்கள
நிதமுடன்செய்வதல்லால் தாமுபகாரமேற்கார்
மதிபெறுநல்லோர்தாமும வழங்கிடுமுபகாரத்துக்
கெதிருபகாரங்கொளளா ரவனியிலியற்றுங்காலே.

இ-ள். ஆறுகள்பெருகினலும் விருட்சங்களபழுத்தாலும மேகங்கள வரு ஷித்தாலும லோகத்துக்குபகாரஞ்செய்கிறதேயல்லாமல் தாங்களபிரதியுப காரங்கொளளார்கள-எ-று. ௯0

புகைநுழையாயிடத்தில் தரித்திரநுழையுமெனல்

நீர்நுழையாயிடத்தில் நெய்புகும்நெய்களன்று
மோர்நுழையாவிடத்திற் பால்புகும்பாலோடன்றும்
பேர்நுழையாவிடத்திற் புகைபுகும்புகைவேறென்றுஞ்
சீர்நுழையாவிடத்திற் றரித்திரனுழைவானென்றே

இ-ள். நீர்நுழையாவிடத்தில் நெய்நுழையும் நெய்நுழையாவிடத்தில்பா ல்நுழையும் பால்நுழையாவிடத்தில் புகைநுழையவும் புகைநுழையாவிடத் தில்தரித்திரவானுழைவான-எ-று. ௯௧

இன்னவையால் நஷ்டமடைவர்களென்ல்.

பெத்ததில்மகிட்சிகொள்ளாப் பிராமணனிதுபெற்றுலும்
வைத்ததுயமிட்சிகொண்ட மன்னனும்பயர்தலெட்சை
யுத்திதவிருக்குமந்த வேசியுமுயர்ந்தாணம்
பத்தற்றகுலத்துமாது நஷ்டமாம்பகருங்காலே.

இ-ள். பெற்றதிலேபிரியப்படாத பிராமணனும் பெற்றதிலே பிரியப்படு கிறராசாவும் லச்சையுண்டாயிருக்கிறவேசியும் லச்சையில்லாதகுலஸதிரியு ம் இவர்களநாலுபேரும் நஷ்டத்தையடைவார்கள-எ-று. ௯௨

இன்னதினால் இன்னதில்லையெனல்.

சொம்பயிர்செய்வோர்க்கில்லை தாழ்வுகள்சிவங்களென்று
மூற்பிறச்செய்தோர்க்கில்லை பாதகமியமபாசஞ்
சொற்பொருமவுனோர்க்கில்லை கலாபமுந்தெரிந்திராவிற்
பற்பெருஞ்சாக்கிரதை பண்ணினுற்பயமுமில்லை

(இ-ள.) கிருட்சிபண்ணுகிறவனுக்குப் பஞ்சமில்லைசெபம் பண்ணுகிறவனுக்குப்பாதகமில்லையமதண்டனையில்லை மவுனமாயிருக்கிறவனுக்குக் கலாபமில்லைஇராத்திரிகாலத்திலே ஜாக்கிறதையாயிருக்கிறவனுக்குப்பயமில்லைஎ-று

இன்னவை விஷமென்றறிதல்.

பருவங்களத்தனுல்நூல் பண்ணலும்பசியில்லாத
தரணங்கள்தன்னுலன்னம் பொசித்தலுந்தரித்திரற்கே
கிரணங்களொத்தமின்னுள கோஷடியும்விருத்தனுக்கு
பொருமந்தவேற்கண்ணாள்தன் போதமும்விடமாய்த்தோன்றும்.

(இ-ள.) வித்தையப்பியாசம் பண்ணுகிறகாலந்தப்பி வித்தைபடிக்கிறதும் அசீரணத்தின்பேரிலேபோசனம்பண்ணுகிறதுந்தரித்திரனுக்கு அழகியஸதிரீகளுடைய கோஷடியும்விருத்தனுக்குவாலை ஸதிரீகளுடையகோஷடியும் இந்தநாலுகாரியமும் விஷமாகும்-எ-று, ௧௪

துற்சனன்சத்தியத்துக்குட்படானெனல

அரவுதுற்சனரிற்றீயோராரெனில் கடுத்தனென்னைப்
பரவுதுறசனனேதீயோன் பாம்புமந்திரத்தால்திறகும்
திரளமணியதனுநிற்குஞ் சேர்ந்ததுற்சனன்றானென்றும்
ஒருவர்யோசனையுங்கேளானவன்கொடியோனென்றேதும்

இ-ள். சற்பத்திலுங்கொடியவிஷமுடையவன் துற்சனனேயாகும் அதென்போலவென்னிற்பாம்பானதுமணிமந்திர அவிழ்தங்களினாலேகட்டுபட்டும்துற்சனனாயிருக்கிறவன் எத்தனைவிதங்கள்சொன்னாலும் தன்னுடையபுத்தியைவிடமாட்டான்-எ-று. ௧௫

துற்சனனுக்குநற்போதனைசெயில்தன்புத்திவிடானெனல்

கண்ணுறுகற்பூரத்தால் புழுகுகஸ்தூரியாலே
பண்ணியேசேறுசெய்து உள்ளியைப்பத்துப்பன்னீர்த்
தண்ணியாறபயிர்செய்தாலுந் தன்னாற்றநீக்காப்போல
நண்ணியெத்தனைசெய்தாலுந் துறசனனலத்தனாகான்

இ-ள். நல்லகளபகஸ்தூரிகற்பூரத்தினாலேசேறுசெய்துநடுவேஉள்ளியைவசம்பைகட்டுப்பன்னீர்வார்த்துப்பயிர்செய்தாலும் உள்ளியானதற்கு தன்னுடையநாற்றம்போகாது அப்படிபோலே துறசனனுக்கெத்தனைநலங்களைச்சொன்னாலும் அவனுக்குநல்லபுத்திவராமாட்டாது-எ-று. ௧௬

பிள்ளைகளைத்துதிக்கலாகாதெனல்.

குருவினைத்துதிக்குமுன்னே கூடியசபையினன்றி
அருளுவோன்றேமுன்றனைத் துதித்திடவடியார்தன்னை

பரவியகருமமாக வேண்டிடில் துதிக்கப்பாரி
உருமடிச்சிடில் துதிக்க மகவினைத்துதிக்கொணுதோ

(இ-ள்) குருவைக்கண்டவுடன் துதிக்கவேணும்கன்றிசெய்தவனையுந்தேர் மூனையுஞ் சபையில் துதிக்கவேணும் தாசிதாசானைக்காரியங்கொள்ளவேணும் போது துதிக்கவேணும் பாரியாளவனை உருமடிச்தபிறகு துதிக்கவேணும்பி ள்ளைகளை ஒருக்காலுந் துதிக்கக்கூடாது—எ-று. (௯௭)

இவர்கள்முகத்தில் விழிக்கலாகாதெனல்.

தாவுபட்சியில்சண்டாளி சாத்தியகாக்கைநாற்கால்
மேவியமிருசந்தன்னில்சமுதைசண்டாளியென்னும்
யாவதுகருமம்யோகி யவரில்சண்டாளியெனனும்
பூவில்வாழ்மாந்தர்தன்னிற் பொருந்துதூஷணசண்டாளி

(இ-ள்) பறக்கிறபட்சியிலே காக்கைசண்டாளி நாற்கால் மிருகத்தில் சமுதைசண்டாளி ரிஷிகளிலேகோபமுடையவன்சண்டாளிமனிதரிலே தூஷிக்கிறவன்சருவசண்டாளி ஆதலால்இவர்கள்முகத்திலேவிழிக்கலாகாது—எ-று

நற்குலபுத்திரனுசார மடைவனெனல்.

கார்கணைக்கண்டமஞ்ஞை களித்தெழுந்தாடல்போலு
மேர்பெருமதியைக்கண்டா லாம்பலும்தங்கல்போலும்
சார்வுறவசந்தகாலந் தழைத்திடுமடவிபோலுஞ்
சீர்பெறுகுலத்தில்வாழுஞ் செல்வற்குமாசாரஞ்சேரும்

(இ-ள்) மேகத்தைக்கண்டமயில்கள்கூத்தாடுதல்போலுஞ்சந்திரனைக்கண்ட ஆம்பல்மலருகிறதுபோலும்வசந்தகாலத்திலேவிருட்சங்கள் தழைகிறது போலும் நல்லகுலத்திற்பிறந்தபிள்ளைக்கு ஆசாரமுஞ்சுத்தமுஞ்சேரும்-எ-

பிரமஅத்தி சேரும்வகை யறிதல்.

சோதிடஞ்சொல்லுவோனுந் தொல்வழக்குரைபபோன்றனும்
பேதமாயெவர்றுக்கேனும் பிராய்ச்சித்தம்விதிக்கின்றேனும்
பேதமாய்வயித்தியங்க ளியற்றுவோனிவர்கள்நூலின
சோதனைதப்பிசெய்தால்பிரமதத்திதோஷஞ்செல்லும்

(இ-ள்) சோதிடஞ்சொல்லுகிறவனும் வழக்குத் தீர்க்கிறவனும் யாதொரு காரணமின்றி பிராச்சியத்தம்பண்ணுகிறவனும் வயித்தியம் பண்ணுகிறவனும்இவர்களநாலுபேயரும் சாஸ்திரப்படிக்குச்செய்யாவிட்டால் பிரம அத்தி தொடரும்—எ-று. (௱)

நீதிசாரமூலமும் - உரையும்

முற்றிற்று.